# வானவில்



மலர் : 01

இதழ் : 01

ஆற்றல் மேம்பாட்டுக் கழகம்
சைவ வித்தியா விருத்திச் சங்கம்
(சைவச் சிறுவர் இல்லம்)
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

# வானவில்

திண்ணிய நெஞ்சம் வேண்டும் தெளிந்த நல்லறிவு வேண்டும் - பாரதி.

**ஆற்றல் மேம்பாட்டுக் கழகம்**
**சைவ வித்தியா விருத்திச் சங்கம்**
**(சைவச் சிறுவர் இல்லம்)**
**திருநெல்வேலி யாழ்ப்பாணம்**

**செயற்குழு 2008**

காப்பாளர் : திரு. அ. தற்பரானந்தன்

ஆலோசகர் : திரு. சோ. பத்மநாதன்

முகாமையாளர் : திருமதி சிவசக்தி இராதாகிருஷ்ணன்

தலைவர் : செல்வி நாகராசா நிரோஜா

உபதலைவர் : செல்வி யோகராசா யசோதா

செயலாளர் : செல்வன் சண்முகசுந்தரம் பிரதீபன்

உபசெயலாளர் : செல்வன் இரத்தினானந் சஜீவன்

இதழாசிரியர்கள்
: செல்வன் வி. இலங்கேஸ்வரன்
செல்வி சி. குணாளினி

வகுப்புப் பிரதிநிதிகள்
: செல்வி ராஜன் அறிவழகி
செல்வி திலகநாதன் ராகசுதா
செல்வன் குபேரராஜன் சிவதர்சன்

ஒருங்கிணைப்பாளர்கள்
: திரு. வே. க. சந்திரகுமார்
(ஆசிரியர் உளவளத் துணையாளர்)
திருமதி மேரி பெனிக்கா பிலிப்
(ஆசிரியர் உளவளத் துணையாளர்)

## காப்பாளரின் ஆசிச் செய்தி

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆற்றல் மேம்பாட்டுக் கழகமானது "வானவில்" எனும் சஞ்சிகையை வெளியிடுகின்றது. மாணவர் ஆக்கங்களை தாங்கி வெளிவரும் இச் சஞ்சிகைக்கும் இதனை அழகுற வெளியிடும் ஆற்றல் மேம்பாட்டுக் கழகத்திற்கும் எனது ஆசியையும் வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அ.தற்பரானந்தன்
தலைவர்
சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
திருநெல்வேலி.

## இதழாசிரியர் கருத்து

எங்கள் மனதிலிருந்து.........

வணக்கம்

ஆற்றல் மேம்பாட்டுக் கழகத்தின் முதலாவது இதழோடு உங்களை சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். எம்மிடத்தில் உள்ள திறன்கள் வெளிக் கொண்டு வரப்பட்டு "வானவில்" என்னும் பெயர் தாங்கி இவ்விதழ் வெளியிடப்படுகின்றது. இந்நாளை ஒரு பொன்னாளாகவே நாம் கருதுகின்றோம். எம் ஆக்கங்களைத் தாங்கிய இவ்விதழிற்கு எவ்வித இடையூறும் ஏற்படாது அருள் செய்த இறைவனை நாம் பணிந்து வணங்குகின்றோம். எம்முடைய எண்ணங் களுக்கு வர்ணம் தீட்டியும் எமது உள்ளத்தில் உள்ளதைப் பகிர்ந்து கொள்ள கவி வரியாகவும், கதையாகவும் எனப் பல ஆக்கங்களாக வெளியிடு கின்றோம். எமது திறமைகளை வானவில் என்னும் இவ்விதழ் மூலம் வெளியிட எமக்கு உதவிய சகல ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது எண்ணங்களால் உருவான வானவில் உங்கள் மனம் எனும் வானத்தில் தோன்றும் நேரம் பல வர்ணங்களைக் காட்டும் என்று நம்புகின்றோம்.

எமது வானவில் தாங்கி வரும் அனைத்து ஆக்கங்களும் எமது மாணவர்களின் திறமையையே வெளிக்காட்டுகின்றன. இவ்விதழ் உங்கள் மனங் களில் இடம்பிடித்து வானளாவி நிற்க வேண்டும். அதற்கு நீங்கள் எமக்கு ஆதரவு அளிக்க வேண்டும். இவ்விதழுக்கு சங்க மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் ஆக்கம் தந்ததையிட்டு மகிழ் வடைகின்றோம். சமூகத்தில் ஒரு மனிதன் ஏதாவது காரணத்தினால் மனமுடைந்து விடுகின்றான். அவ்வாறு வாழும் மனிதன் இனி சாவா, வாழ்வா என்று யோசிப்பானே தவிர தன்னுள் உள்ள திறன்களை வெளிக் கொண்டு வருவது எப்படி என்று யோசிக்க மாட்டான். தமக்குள்ளேயே தம்முடைய ஆற்றலை ஒடுக்கி வாழும் உயிர் எத்தனை அத்தனைக்கும் இது விடிவிளக்காய் விளங்கும் வானவில்லானது வானத்தில் எவ்வாறு பிரகாசமாக பிரகாசித்துக் கொண்டிருக்கின்றதோ அது போல எமது இல்லத்தில் இருக்கும் ஒவ்வொரு மாணவர்களும் பிரகாசமாக உலகில் வேண்டும். அதற்கு இறைவன் அருள் புரிய வேண்டும்.

நன்றி

இதழாசிரியர்கள்.

## மன அமைதி பெற

மகனே ! உனக்கு மன அமைதி வேண்டுமானால் உலகத்தவர்கள் மீது குறை கூறாதே. மற்றும் உன்னிடத்தில் உள்ள குறைகளைக் கிளறிப்பார். உலகம் முழுவதையும் உன்னுடையதாக ஆக்கக் கற்றுக் கொள். - **(சாரதாதேவி)**

## வாழ்க்கையின் குறிக்கோள்

சரியான இலட்சியமற்ற வாழ்க்கை துடுப்பில்லாத படகைப் போன்றது. இலட்சியம் அற்ற வாழ்க்கை தாவர வாழ்க்கைக்குச் சமனானது. - **(சுவாமி சுவானந்தா)**

## அறிவை வளர்த்திட

அறிவு வளர்ச்சிக்கு ஒரே ஒரு வழி முறை தான் இருக்கிறது. அதுதான் நம்முடைய மனத்தை ஒருமுகப்படுத்துவதாகும். கல்வியின் அடிப்படைக் குறிக்கோளே மனத்தை ஒருமுகப்படுத்துவது தான். சாதாரண மனிதரிலிருந்து எல்லாச் சக்திகளையும் பெற்ற யோகி வரை அனைவரும் தங்களுடைய அறிவு வளர்ச்சிக்கு அந்த முறையைத் தான் பின்பற்றியாக வேண்டும். - **(சுவாமி விவேகானந்தர்)**

## விரும்பத் தகாத செயல்

நாட்டின் பெயரால், இனத்தின் பெயரால், சாதியின் பெயரால் உயிர்களைக் குறிப்பாக மனித உயிர்களை வேறுபடுத்தி பிரித்து பேசுவது இறைவனுக்கு நேர் விரோதமான செயலாகும். - **(ராமலிங்க வள்ளலார்)**

## அன்பு

கடவுளிடம் பக்தி செலுத்த வயதும் உருவமும் குறுக்கிடாது கல்வி, செல்வம், ஜாதி, பலம் முக்கியத்துவம் அல்ல. நல்ல ஆசாரம், நற்குணம் இவற்றிலும் பகவான் அவ்வளவாகக் கவனம் செலுத்துவதில்லை. அவர் அன்பு ஒன்றையே எதிர்பார்க்கின்றார்.

கண்ணுக்குக் கண் என்று ஒவ்வொருவரும் பழிவாங்கத் துவங்கினால் உலகமே குருடாகி விடும். (An eye for an eye will make the whole world blind)

சட்டப்படி நடப்பதை விட மரியாதையாக நடப்பது தான் மிகவும் மரியாதைக்குரியது.

நா. சந்திரிக்கா
தரம் - 10.



## இல்லம் ஓர் ஆலயம்

அடைபட்ட சுவரினுள்ளே
பூட்டப்பட்ட கதவுகளினூடே
ஓர் உலகம் கண்டு
சாதனை புரியும்
உன்னத ஆத்மாக்களே !
எங்கள் வாழ்வு
அடக்கப்படவில்லை
எங்கள் சுதந்திரம் பறிக்கப்படவில்லை
சமுதாயம் எப்படியும் வாழலாம் என்கிறது
இல்லம் எமக்கு
இப்படித்தான் வாழ வேண்டும் என்கிற
பாடம் புகட்டிய ஓர்
புனிதமான ஆலயம்

செல்வி ரஜீவனா ராஜன்
A/L - 2010

## தெய்வீக மனிதர்

பிறக்கும் போதே சிறகடிக்கத் துடித்தவர்கள் நாங்கள் - அதை
உணர்ந்த தாத்தா அமைத்துத் தந்த இல்லம் இந்த இல்லம்
கனவும் கற்பனைகளோடும் கழியும் எங்கள் காலம்
கல்வி என்ற இலட்சியத்தில் கவனம் கொள்ளும் காலம்

உருண்டு படுக்க இடமுண்டு, உடலை நனைக்கத் தண்ணீருண்டு
வயிற்றுப் பசிக்கு உணவுமுண்டு வாழ்விலே
கல்வி கற்பதற்கு வசதியுண்டு கற்கிறோம் - எங்கள்
கவலைகளை ஒதுக்கிவிட்டு நிற்கிறோம்

ஆதரவற்றோர் என்ற சொல்லால் அழைக்கிறீர்
எம் தாத்தா போல் அறவழி வகைகள் என்ன செய்கிறீர்?
பாதை எங்கள் பாதை தாத்தா போட்ட பாதையாம் - நம்
பயணத்துக்கு வசதி செய்த பாதையாம்

சொல்லினோடு மட்டும் வாழ்ந்ததில்லையே தாத்தா
தூர நோக்கினோடு வாழ்ந்த தூயவர்
வல்லமைகள் கொண்ட வீர மனிதராம் - அவர்
வாழ்வு நம்மைப் போன்றவர்களுக்கு மாதிரி

நெஞ்சில் அந்த மேதை செய்த சேவையே என்றும்
நிற்கும் இந்த நிழலில் வாழும் புண்ணியம்
பஞ்சமில்லை எங்களுக்குப் பாடுவோம் - தாத்தா
பாதையிலே வீறுநடை போடுவோம்

செ.இலக்ஷி
இல்லப் பழைய மாணவி

# அம்மா என்னும் தெய்வம்

மார்கழி மாதக் காற்று சில்லென்று யன்னல் வழியாக வந்து அவனை மெல்லத் தட்டி எழுப்பியது. அவள் திடீரென எழுந்து நேரம் பார்க்கும் போது 7.00 தாண்டி விட்டது. அவள் அவசர அவசரமாக தனது ஊனமுற்ற தாயை கவனித்து சமைத்து முடிப்பதற்குள் நேரம் 8.00 மணியை தாண்டிவிட்டது. துஷா அன்று ஆப்பீஸுக்கு தாமதமாகச் சென்றாள்.

துஷா ஆபீஸுசை அடைந்ததும் அவளது மனம் சஞ்சலமடைந்தது. ஆபீஸ் மெடம் ஏன் தாமதம் என்று அவளைக் கேட்டபோது அவளால் தகுந்த காரணம் சொல்ல முடியாது தவித்தாள் மெடம் ஒரு முறை அவளை மன்னித்து விட்டார். ஆப்பீஸ் வேலையை அவளால் சரியாக கவனிக்க முடியாது தன் தாயின் எண்ணத்தில் தவித்துக் கொண்டிருந்தாள்.

துஷாவிற்கு கடவுள் மாதிரிதான் அவளது தாய் துஷாவின் அம்மா ஒரு ஊனமுற்ற தாய் "ஒரு நாள் துஷாவும்" அவளது அம்மா, அப்பா, ஆசை அண்ணனுடன் கோயிலுக்குச் சென்று வரும் வேளை அப்பாவையும் அண்ணாவையும் அந்த கயவன் பிரித்து எடுத்தான் அதில் தான் துஷாவின் அம்மாவுக்கு கையும், காலும் வழங்காமல் வந்தது அப்போது துஷா கா.பொ.த.சாதரணதரம் படித்துக் கொண்டிருந்தாள்.

அவளால் அந்தப் பரீட்சைக்கு முகம் கொடுக்க கூட முடியாது கலங்கினாள். துஷா தாயின் ஊக்கத்தால் படித்து நல்ல பெறுபேற்றை தேடிக் கொடுத்தாள். துஷா உயர்தரப் படிப்பை முடித்து பல்கலைக்கழகம் முடித்து இப்போது நிரந்தர வேலையுடன் தன் தாயை பாதுகாக் கின்றாள்.


துஷாவின் தாயிற்கு ஒரே ஒரு ஆசை தான் அதுவும் அவளுக்கு கலியாணம் செய்து பார்த்து பேரப்பிள்ளை களுடன் கூடி விளையாட வேண்டும் இந்த ஆசையை துஷாவுக்கு கூறினாள் அப்போது அவள் சொன்னாள் "அம்மா இன்னும் இரண்டு வருடங்கள் காத்திருங்கள் நான் நீங்கள் நினைத்தபடி கல்யாணம் செய்வேன். அப்போது தாய் நான் அதற்கிடையில் உன்னைப் பிரிந்தால் என்ன செய்வாய் எனக் கூறியதைக் கேட்ட துஷா விம்மி அழுதாள்.

துஷா தானும் தன் வேலையுமாக திரிந்தாள் சில மாதங்களின் பின் அவளை பெண் கேட்டு வரன் வந்ததாக தாய் கூறியிருந்தாள். துஷாவின் மனதில் தானும் எத்தனை நாள் தன் தாயை ஏமாற்றுவது என நினைத்து வரனைப் பார்க்கும் படி சொன்னாள். கலியாண நிச்சயதார்த்த நாள் வந்ததும் மாப்பிள்ளை வீட்டார் அனைவரும் வந்தார்கள் அவள் அறையிலிருந்து வெளியில் வரும் போது அவளது அழகை வர்ணிக்க முடியாது மாப்பிள்ளை கணேஷ் தவித்தான். அவள் ஒரு முறை மாப்பிள்ளையை நிமிர்ந்து பார்த்த போது அவளது இதயம் இரண்டாக வெடித்தது போல இருந்தது. ஏன் என்றால் அவள் வேலை செய்யும் ஆப்பீஸ் மெடத்தின் மகனல்லவா..? அவன் அருகில் மெடம் இருந்தார். துஷா உடனே விழுந்து வணங்கினாள்.

துஷா - கணேஷ் திருமணம் இனிது நிறைவேறியது. அவளது தாயின் ஆசைப்படி துஷா ஒரு பேரனைப் பெற்றுக் கொடுத்தாள். அவளின் தாய் தன் பேரனுடனே தன் பொழுதைக் கழித்து வந்தாள் இவ்வாறு நாட்களும் நகர்ந்து சென்று கொண்டே இருந்தது சில மாதங்களின் பின் துஷாவுக்கு தாயின் மரணம் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியது. துஷாவால் தன் தாயின் இறப்பைத் தாங்க முடியாது தவித்தாள். கணேஷால் ஒன்றுமே செய்ய முடியாது அவனும் அவளை ஆறுதல் வார்த்தைகள் கூறி அவளை தெம்பாக்கினான். "அம்மா உலகின் கடவுள்"

நா. நிறோஜா
A/L 2009

## மலர்கள்



அழகின் விழியே மலர்கள்
அதன் வாழ்க்கை ஒரு நாள்
மனதை கவரும் பூக்கள்
கண்ணுக்கினிய நிறங்களெல்லாம்
மண்ணில் காண வைத்திடுவாய்
றோஜா, மல்லிகை, முல்லை எனப்
பல பெயர்கள் கொண்டு அழைத்திடுவோம்
வண்டின் வரவை எதிர்பார்த்து நின்று
உண்டு களிக்க மது அளிப்பாய்
வண்டுகள் உட்கார இடம் கொடுப்பாய்
நல்ல வாசனை வீதியில் வீசி நிற்பாய்
ஈசன் அடியிற் பணிந்திடுவாய் - அவர்
முடி மீதும் ஏறி நிற்பாய்
பூசனை செய்ய உதவிடுவாய்
அடியார் மனதை கவர்ந்திடுவாய்
அழகின் அழகே மலர்கள் - என
மக்கள் மனதை கவர்ந்திடுவாய்.

ஆக்கம் : கி. கயீனா
தரம் : 10

## நிழலாடும் நினைவுகள்

எழுதாத காவியமாய் வரையாத ஓவியமாய்
பதிந்து விட்ட பல நினைவுகள்

என் சிந்தனைகள்
என் உணர்வுகள்
என் எண்ணங்கள்
எல்லாமே என் உரிமைகள்

உங்கள் சுடும் விழிகளினால்
தீண்டி என் உணர்வுகளை சிதைத்து விடாதீர்கள்
என் சந்தோசங்களில் சந்தேகங்களை விதைக்காதீர்கள்

என் பிஞ்சு மனதில் ரணங்களை ஏற்படுத்தாதீர்கள்
கபடமற்ற என்னை பொய் வார்த்தைகளால் சாடாதீர்கள்

நான் புனிதமானவள் - என்னை
இன்றல்ல இறுதிவரை இப்படியே
இருக்க விடுங்கள்.

ஆக்கம் : செல்வி ர. சாளினி
தரம் : 11

## அன்புத்தாயே அரவணைத்தாய்

கருவறையிலே எனை சுமந்தாய்
காத்திருந்தாய் எனைப் பார்க்க
உதயமாய் நான் பிறந்தேன்
உன்முகம் மலர்ந்ததம்மா

என் புன்முறுவலிலே தாயே
என்னைக் கட்டியணைத்து முத்தமிட்டாய்
என் உதயமே
என் அன்னையின் ஆனந்தம்

அரவணைக்க உன் கைகள்
ஆசை முத்தம் தந்த உன் கன்னம்
நடையிலே உன் நடை
நாடக மேடையிலே உன் வேடம்

உன் மடியிலே விளையாடினேன்
உன்னையே தினமும் நாடி வந்தேன்
உன்னுடைய தாலாட்டில் உறங்கினேன்
உன் அன்புள்ளத்தை நேசித்தேன்

அன்பினை வடிக்க ஆயுளும் இல்லை
அன்பினை அழிக்க ஆயுதமும் இல்லை
என் செல்லத் தாயே என் உயிரே
தாய் மடியே என் இறைமடி

ராஜினி இராசேந்திரம்
A/L - 2009.

## நிழலான நிஜங்கள்

எனக்கு என் வாழ்வில்
என்ன
நடக்கணும்?

என் முன்னேற்றம்
ஊருக்கு நற்பெயரைத் தேடித் தருகின்றது
எனது நாமம் குவலயத்தில்
சிறகடிக்கட்டும்

என்னுடைய புகழை
பார்க்க முடியாத சிலர்
சுனாமியாக எழுகின்றார்கள்

என் வாழ்வில் - எனக்கு
என்ன நடக்கணும்?
நடந்தவை எல்லாம்
தாங்காத வேதனைகள்

இதயமில்லாத மனங்கள்
சிலர் என்னை அவமதிக்க தூண்டுவார்கள்
யாவையும் தாண்டி
நற்சேவை புரிவேன்

சுறு சுறுப்பாகி விட்டால்
நான் செய்யும்
சேவையை தடைசெய்ய முடியாது

எதற்காக நான் பூவில்
மலர்ந்தேன்
அதற்காக நான்
தயாராகி விட்டேன்

என் வாழ்வில் இனி எனக்கு
என்ன நடக்கணும்...?
நடப்பவை எல்லாம்
நல்லவை யாகட்டும்

ஆக்கம் : நா. நிரோஜா
தரம் : 12



## தாய்

பத்து மாதம் சுமந்து பெற்று
பாசத்தோடு வளர்த்தெம்மை
பாலூட்டி சீராட்டி
பாலமுதூட்டி பக்குவமாய்
பள்ளியிலே பயில வைத்து
பார் போற்ற வளர்த்திடும்
பண்பு மிகு தாய்.
உள்ளமதை பூக்கசெய்து
உதிராமல் எமை காத்து
உத்தம வாழ்விற்கு
உன்னதமாய் எமைக் காத்து
உறுதியுடன் வாழ்வதற்கு
உண்மையான வழிசொல்லி
உள்ளமதில் நிறைந்திட்ட
உன்னதமான காவியம்
அம்மா

தி.ராகசுதா
தரம் 08

## நண்பி

வறண்ட வாழ்விற்கு
வசந்தம் தர வந்தவள்
இருண்ட வாழ்விற்கு
ஒளியூட்ட வந்தவள்
இன்பத்திலும் துன்பத்திலும்
நிஜத்திலும் நினைவிலும்
துணையாக உள்ளவள்

## தவிப்பு

மன ஏக்கம்
ஒரு தோள் சாய!
சாயும் வேளை வேண்டும்
அன்பான வார்த்தைகள்.
அமுதூட்டவில்லை தாய்
அரவணைக்கவில்லை தந்தை
நம்பிக்கை தரவில்லை உறவுகள்
தேடுகின்றேன் என் மனதில்
வசந்தம் தர ஒரு உறவை

S. குணாளினி
தரம் : 11

## வறுமை

ஓர் ஊரில் ஒரு தாயும் நான்கு பிள்ளைகளும் வாழ்ந்து வந்தனர். அவர்கள் பெரும் துன்பத்திலும், கவலையிலும் தமது வாழ்க்கையைக் கழித்தனர். இவர்கள் ஒரு கப்பல் ஓட்டி போல் வாழ்க்கையைக் கழித்து வந்தனர். உடுக்க உடையின்றி உண்ண உணவின்றித் தவித்தனர். இவர்களை இந்த ஊரில் உள்ள மக்கள் கவனிப்பதில்லை. அவளுக்கு கணவன் இல்லை. அந்த நான்கு பிள்ளைகளும் சிறிய பிள்ளைகள். அதனால் பிள்ளைகளை வளர்த்தெடுப்பதற்காக பெரும் கஷ்ரப்பட்டாள். அத்தாய் கொஞ்சக் காலமாய் பிச்சை எடுத்து பிள்ளைகளுக்கு ஒரு வேளை உணவு ஊட்டித்தானும் உண்டாள்.

நோய் வந்து இருந்த போது அத்தாய் பிள்ளைகளை விளையாட விட்டு விட்டு ஒரு உடைந்த இடிந்த வீட்டில் படுத்து உறங்கினாள் பசித்தவுடன் பிள்ளைகள் நான்கு பேரும் தாயிடம் ஓடிப்போய் பக்கத்தில் இருந்து "அம்மா, அம்மா பசிக்குது" என்று அழுதனர். தாய் தனது வருத்தத்தைப் பார்க்காது உடனே எழும்பிப் போய் பிச்சை கேட்டு அலைந்து திரிந்து ஒருமாதிரி உணவுகளைக் கொண்டு வந்து கொடுத்தாள். இவர்கள் நான்கு பேரும் சந்தோசத்துடன் அந்த உணவை அடிபடாது சேர்ந்து உண்டனர். இவ்வாறாக சிறு பிள்ளைகள் நான்குபேரும் கொஞ்சம் வளர்ந்து விட்டனர். மூத்த பிள்ளை கீதன், இரண்டாவது பிள்ளை கீதா, மூன்றாவது பிள்ளை கீர்த்தனா, நான்காவது பிள்ளை சதீஸ் இந்தப் பிள்ளைகள் பசிக் கொடுமையால் உடுத்த உடுப்புடன் கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கி விட்டு கோயிலில் அன்னதானம் வாங்கிவிட்டு வரும் போது அங்குள்ள மக்கள் ஏளனமாக சிரித்து நக்கல் செய்தனர். அவர்கள் அதையெல்லாம் தாங்கிக் கொண்டு அந்த அன்னதானத்தை தாயிடம் கொடுத்தனர். தாய் எல்லோருக்கும் தீத்தி தானும் உண்டாள்.

இரவாகியதும் அந்த உடைந்த பழைய கட்டிடத்துக்குள் போய் எல்லோரும் ஒன்றாக நிலத்தில் படுத்து உறங்கினர். நள்ளிரவு 12.00 மணிக்கு இடி இடித்தது. குளிர் காற்று வீசியது. மின்னல் அடித்தது. மழை சோ எனக் கொட்டியது. இவர்கள் உடனே எழும்பி நான்கு பேரும் அழுதனர். தாய் என்ன செய்வதென்று தெரியாமல் உடனே ஓடிப்போய் ஒவ்வொரு வீடாகச் சென்று உறங்குவதற்கு இடம் தாருங்கள் மழை பெய்கிறது. நான்கு பிள்ளைகளும் நனைந்து கொண்டு உடைந்த வீட்டில் உறங்குகிறார்கள். இடம் கொஞ்சம் தாருங்கள் கையெடுத்து கும்பிட்டு கெஞ்சி அழுதாள். அவர்கள் இரக்கப்படாமல் துரத்தி விட்டனர். மறு வீட்டில் கேட்ட போது அவர்கள் பிச்சைக்காரிக்கு இடம் தரமாட்டோம் என்று கூறினர். அவள் அதையும் மனதில் ஏற்காது மறு வீட்டில் கேட்ட போது அவர்கள் இடம் கொடுக்கவில்லை. அவள் அழுது கொண்டு மனவருத்தத்துடன் தன்னைப் பார்க்காது குழந்தைகளை நினைத்துக் கொண்டு வீட்டிற்கு சென்றாள். பிள்ளைகள் மழைக்குளிர் தாங்காது அழுதனர். தாய் உடனே மழை விட்டதும் தான் நிலத்தில் இருந்து கொண்டு மடியில் நான்கு பேரையும் வைத்திருந்து அழுதாள். ஒரு பிள்ளை உடனே கேட்டது ஏன் அம்மா அழுறிங்க உங்களுக்கு என்ன நடந்தது என்று கேட்டு தானும் அழுதது. சிறிது நேரத்தில் அழுது கொண்டு தாயின் மடியில் உறங்கியது. காலையானதும் தாய் வீடு கட்டுவதற்காக ஓலை பின்னி கஷ்ரப்பட்டு சிறிய கொட்டில் ஒன்று கட்டி அதில் வாழ்ந்தனர்.

மூத்த மகனுக்கு இப்போது பத்து வயதாகிவிட்டது. அவன் உடனே பாடசாலைக்குச் செல்ல ஆரம்பித்தான். பாடசாலைக்குச் சென்றதும் உடனே தாய் மகன் வரப் போறான் என்று உணவு தேடச் சென்றாள். அவள் பிச்சை வாங்கிக் கொண்டு ஒவ்வொரு வீடு வீடாகச் சென்றாள். உடனே மூத்த பையன் கீதன் பாடசாலை முடிந்ததும் வீதியால் வந்து கொண்டிருக்கும் போது தாயைக் கண்டுவிட்டு கட்டிப் பிடித்து அதிலே நின்று அழுதான். அங்குள்ள மக்கள் ஏளனமாகச் சிரித்தனர். கீதன் தாயைப் பிச்சை எடுக்க வேண்டாம் என்று சொல்லித் தான் வேலைக்குச் சென்றான். தாய் உடனே கூறினாள் நீ பாடசாலைக்குப் போ நான் உழைக்கின்றேன் என்று கூறினாள். கீதனோ "அம்மா வேண்டாம் நீங்கள் இவ்வளவு நாளும் கஷ்ரப்பட்டீங்கள் நான் இனி உழைக்கின்றேன்" என்று கூறினான். மறுநாள் அவள் வேலைக்குச் சென்றான். அதிலிருந்து தாய் பிச்சை எடுப்பதை நிறுத்தினாள்.

ஒருநாள் மூன்று பிள்ளைகளும் விளையாடிக் கொண்டிருந்த போது கடைசிப் பிள்ளைக்கு பாம்பு தீண்டியது. உடனே இறந்துவிட்டான். தாய் கத்திக் குழறி அழுத போது யாரும் வரவில்லை. மூத்த மகன் வேலை முடிந்ததும் வீட்டிற்கு வந்து ஏன் அம்மா அழுகின்றீர்கள் என்று தாயிடம் கேட்டான். உனது கடைசித்தம்பி பாம்பு தீண்டி இறந்திட்டான் என்று சொல்லி அழுதாள். அவன் ஒருவருடைய உதவியையும் நாடாது அந்த உடலைக் கொண்டு சென்று தாட்டு விட்டு வந்தான். அதிலிருந்து ஒரு முடிவுக்கு வந்தான் தான் எல்லோரையும் நன்றாக ஒரு குறையும் விடாது பார்க்க வேண்டும் போல் அவன் மனதில் ஆசை ஏற்பட்டது.

கொஞ்சக் காலம் சென்றொழிந்த போது தாய் கடைசிப் பிள்ளையை நினைத்து நினைத்து கவலைப்பட்டு நோய் வாய்ப்பட்டு இறந்தாள். காலம் உருண்டோடியது.

இவர்கள் தமது வாழ்வைச் சந்தோசத்துடன் கழித்தனர். கீதன் வளர்ந்து நிலையான வேலையில் சேர்ந்தான். தனக்கென்று ஒரு வீடு கட்டி அதற்கு தன் தாயின் பெயரைச் சூட்டினான். தங்கைகளை வளர்த்து அவர்களுக்கு திருமணம் செய்து கொடுத்தான். பின் இத்திருமணத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தான். அவன் தனது தங்கைகளின் சந்தோசம் தான் தனது சந்தோசம் என நினைத்து இருவருக்கும் ஒரு நல்வாழ்க்கையை அமைத்துக் கொடுத்தான். அவர்களுக்கு ஒரு குறையும் இன்றி தேவையானவற்றை வாங்கிக் கொடுத்து கண்ணை இமை காப்பது காத்து தானும் இனிய வசந்த காலத்தை நோக்கிச் சென்றான்.

யோ. யசோதா
தரம் : 11

தமிழ் மொழிக்குத் தொண்டு செய்த மேல்நாட்டுத் தமிழ் அறிஞர்களுள் தலை சிறந்தவர் வீரமாமுனிவர் ஆவார். இவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். இவரது இயற் பெயர் கொன்ஸன்டைன் ஜோசன் பெஸ்கி. இவர் கிறிஸ்தவ மதத்தை தமிழ் நாட்டில் பரப்பும் மதபோதகராக வந்து சேர்ந்தார்.

வீரமாமுனிவர் தமிழ் நாட்டிற்கு வந்தபோது தம் பெயரை "தைரியநாதசாமி" என்று வைத்துக் கொண்டார். இவருடைய தமிழ்ப் புலமையைக் கண்ட மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் "வீரமாமுனிவர்" என்று இவருக்குப் பெயரிட்டனர்.

அந்நாளில் சிறந்த தமிழாசிரியாக விளங்கியவர். சுப்பிரதீபகவாயர். அவரிடம் வீரமாமுனிவர் முறையாகத் தமிழ் மொழியைக் கற்றார்.

திருக்குறள், சிந்தாமணி, கம்பராமயாணம் ஆகிய நூல்கள் வீரமாமுனிவரின் உள்ளத்தைக் கவர்ந்தன. சிந்தாமணியைப் போல் தாமும் ஒரு காப்பியம் இயற்ற விரும்பினார். அதன் பயனாகத் "தேம்பாவணி" என்னும் காப்பியத்தைப் பாடி முடித்தார்.

இந்நூலில் திருவள்ளுவர், சேக்கிழார், மாணிக்கவாசகர், கம்பர் முதலான புலவர்களின் சொற்களும் கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன. மேல் நாட்டுப் பெரும்புலவர்களான ஹோமர், வோர்ஜில், நாத்தே, தாசே போன்றவர்களின் கருத்துக்களையும் தேம்பாவணியில் காணலாம். இந்நூல் கத்தோலிக்கத்திற்குக் கலைக் களஞ்சியமாக விளங்குகின்றது.

தமிழில் தலை சிறந்த நூலாகிய திருக்குறளின் சிறப்பை மேன்னாட்டார் அறியச் செய்த பெருமை வீரமாமுனிவரையே சாரும்.

திருக்குறளின் முதற் பகுதிகளான அறத்துப் பாலையும், பொருட் பாலையும் இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தார். இதுவே ஏனைய ஐரோப்பிய மொழிகளில் திருக்குறளை மொழி பெயர்ப்பதற்கு வழிகாட்டியாகிறது.

வீரமாமுனிவர் உரைநடை எழுதுவதில் வல்லவர். தமிழ் உரைநடையை வளர்க்க விரும்பினார். வேதியர் ஒழுக்கம் வேதவிளக்கம், பேதமருத்தல், ஞானம் உணர்த்துதல், திருச்சபைக்கணிதம், வாமன் கதை போன்ற உரைநடை நூல்களையும். எழுதினார்.

திருக்காலூர்க் கலம்பகம், அன்னை அழுங்கல் அந்தாதி, கித்தேசி அம்பாள் அம்மானை, அடைக்கல மாலை, கல்வெண்பாமாலை ஆகிய சிற்றிலக்கியங்களையும் இயற்றினார்.

கிண்டலும், கேலியும், நகைச்சுவையும், அங்கதச் சுவையும் ததும்ப "பரமார்த்த குருவின் கதை" என்னும் நகைச் சுவைக் கதை நூலை எழுதினார். இதனை இலத்தீனிலும் மொழி பெயர்த்தார்.

இறுதிவரையில் சமயத்திற்கும், தமிழ் பணிக்கும் தம் வாழ்நாளை அர்ப்பணித்தார். வீரமாமுனிவர் 1747 ஆம் ஆண்டு பெப்ரவரி நான்காம் நாள் அம்பலங்காட்டுக் குரு மடத்தில் அமரரானார்.

இத்தாலி நாட்டில் இருந்து தமிழ் நாட்டுக்குச் சமயத் தொண்டுக்காக வருகை தந்த வீரமாமுனிவர் புகழ் இன்று தேம்பாவணி என்னும் காப்பியத்தால் நிலைத்து நின்றது.

தொகுத்தவர் : சி. கஜந்தினி
தரம் : 08

## உங்களுக்கு தெரியுமா?

| | |
|---|---|
| முதலாவது உலக மகா யுத்தம் ஆரம்பித்தது | - 1914 |
| முதலாவது உலக மகா யுத்தம் முடிவடைந்தது | - 1918 |
| மேதினம் ஆரம்பிக்கப்பட்டது | - 1886 |
| நோபல் பரிசு ஆரம்பிக்கப்பட்டது | - 1901 |
| ஜேர்மனி இரண்டு நாடுகளாக பிரிந்தது | - 1945 |
| சர்வதேச சமாதான ஆண்டு | - 1986 |
| சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது | - 1907 |
| ஐக்கிய நாடுகளின் தலைமையகம் ஆரம்பிக்கப்பட்டது | - 1945 |
| ஆபிரிக்க ஒற்றுமை நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது | - 1963 |
| யுனேஸ்கோ நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது | - 1946 |
| சந்திரனில் மனிதன் முதன் முறையாக காலடி வைத்த ஆண்டு | - 1969 |
| தெற்காசியாவின் உலகப் பிரயாணிகள் ஆண்டு | - 1993 |
| இரண்டாவது மகா யுத்தம் ஆரம்பித்தது | - 1939 |

ஆக்கம் : நந்தினி. ர
தரம் : 10

## தெரிந்து கொள்வோம்

01. தையல் மெஷினைக் கண்டு பிடித்தவர் யார்?
    I.M.சிங்கர்
02. உருக்கைக் கண்டு பிடித்தவர் யார்?
    ஹென்ரி பெசேமர்
03. இயந்திர துப்பாக்கியைக் கண்டு பிடித்தவர் யார்?
    றிச்சாட் கற்லிங்
04. முதல் ஆங்கிலக் கவிஞர் யார்?
    சோசர்
05. ஆறுகள் இல்லாத நாடு எது?
    சவுதி அரேபியா
06. உலகில் மிகப் பெரிய மலர் எது?
    நாம் லீசியா
07. உலகில் ஒரே ஒரு இந்து நாடு?
    நேபாளம்
08. இயேசு நாதரின் தாய்மொழி?
    "கிப்ரு"
09. உலகில் மிக உயரமான மாடிகள் கொண்ட கட்டிடம்?
    எம்பயர்ஸ்ரேட்
10. யப்பானில் அரசியல் சட்டத்திற்கு எழுத்து வடிவம் கொடுத்த மன்னர் யார்?
    மைஜி சக்கரவர்த்தி

அ. லாவண்யா
தரம் : 11

## புரியாத சோகம்

இறைவன் தந்த வாழ்வு
இன்று ஏனோ
இடம் மாறிப் போய்க் கொண்டிருக்கிறது
நெஞ்சத்தின் நெருடல்கள் - எனை
வஞ்சம் தீர்க்கின்றன.
சோக நிலையிலும்
ஒரு வித சோலைக்குயில்
மனதின் ஓரத்தில்
மறக்காமல் பாடிக் கொண்டிருக்கின்றது
நீண்ட பெருமூச்சு
நிமிடத்துக்கு பல முறை
நித்தமும் இருக்கின்றேன் - என
நினைவூட்டிச் செல்கிறது
சொப்பனம் கூட - சோகத்தையே
சொல்லித் தருகிறது
வாழும் வாழ்க்கை - வசந்தமின்றி
ஆழ்ந்த நெஞ்சு அலைமோதிக் கலைகிறது
எத்தனை சொல்லினும்
இந்த ஏக்கத்தை தீர்க்க
ஏதும் வழியின்றி
ஏமாந்து போகிறேன்

## நட்பு

மனம் என்ற வானத்திலே
மின்னிடும் பல நட்பென்ற தாரகைகள்
யாவற்றிக்கும் காரணம்
அன்பென்ற சூரியன் தான்

அலைந்திடலாம் வானில் பல மேகங்கள் - இருப்பினும்
என்மனம் குளிர அன்பு மழை வார்த்த
கார் மேகம் அந்த ஓர் மேகம் தான் !

உன் கண்ணில் வழிந்த
ஒரு துளி கொண்டு உன் அன்பின் ஆழம்
எதுவென்று கண்டேன்

மணம் வீசிடும் மலர்த் தோட்டத்திலும்
நம் மனம் பேசிடும்
நட்பின் வாசம் சுகமானது
மனம் சாயும் போதெல்லாம்
தலை சாய்ந்திடத் தோன்றிடலாம்

தலை சாய்த்திட வேண்டிடும்
தோழியின் தோளிடம் - உன்
மனம் என்ற ஆசனத்தில்
இருந்து கொண்டு எழுதுகின்றேன்
நட்பென்ற சாசனம்.

ஆக்கம் : நா. நிரோஜா
தரம் : 12



ஜெ. அபிநஜா, தரம் 10.

## விசித்திர மனிதர்கள்

தன்னைத் தான் அறியாத மனிதம்
தடம் புரள்வது ஏன்
தாலாட்டிப் பாடி தூங்க வைக்காததாலா
தாலாட்டின் கருத்துப் புரியாததாலா?

நல்நாடு கேட்டு மனிதர் - தம் நாடு
விட்டு ஓடுவது ஏன்
தலைவிதியா? தலைமையின் தவறா?

விடைகாண முடியாமல் நிற்கும்
மனித இனம் - எங்கே நிம்மதி
என்று தேடுவது ஏன்
அறிவு போதாமையாலோ?

இறைவனால் உருவகிக்கப்பட்ட மனித இனம்
இன்னல்கள் படுவது ஏன் இறைவனை
மறந்ததாலா? இல்லை
இறை சக்தியை வெல்ல நினைப்பதாலா

புத்தர் இயேசு அல்லா வந்தார் - நல்ல
புத்திகள் புகட்ட வென்று
புத்தியை மறந்த மனித இனம்
புழுவாய் துடிக்கிறதே

நாட்டுப் போரில் நிற்கிறதே வாழ்வு - அவரவர்
செய்த பாவ விதிப்படி காலம் நடக்கிறது
யாரைக் குறை சொல்லி என்ன பயன்
அவனவன் கணக்கு முடிகிறது.

இனிமேலாவது இந்த விசித்திர மனிதர்கள்
தங்கள் விதியை நினைப்பாரா
கொடுஞ் சண்டைகள் இல்லா
நாடொன்று வகுப்பாரா

அவரவர் அறிவின்படி - நல்லா
நண்பராய்க் காண்பாரா - அனைவருக்கும்
ஆண்டவன் குழந்தைகள் - என்று
ஆறுதல் அடைவாரா ?

பிரசாந்தினி சற்குணராசா
தரம் : 09

## சமாதானத்தின் பின்பு மறுவாழ்வு

ஒற்றுமையாம் ஒற்றுமை எங்கும்
சமாதானத்தின் பின் ஒற்றுமை
எங்கும் ஒரே ஒற்றுமை
எங்கள் நாட்டில் ஒற்றுமை


ஒற்றுமை விழா கொண்டாடுவோம்
ஒரு உயிர் போல் கொண்டாடுவோம்
ஓங்கி நிற்க கொண்டாடுவோம்
நாட்டு மக்கள் கொண்டாடுவோம்

ஜாதி ஒன்று மதம் ஒன்று
ஒரு தாய் மக்கள் ஒன்று சேர்வோம்
ஒன்றென்றால் ஓங்கி எழுவோம்
நல்ல மக்கள் நாம் எல்லோரும்

நல்ல மக்களின் ஒற்றுமையே
நாடு வளம் பெறச் செய்யுமே
நல்ல சமுதாயம் நாங்களே
உலகம் முழுதும் போற்றுவோம்

ஜெ. அபிநயா
தரம் : 10


## எங்களின் கைவண்ணம்



வி. லிங்கேஸ்வரன், தரம் 11



நா. நிரோஜா, க.பொ.த(உ/த) 2009.



ச. தமிழ்ச்செல்வன், தரம் 08.




கு. சிவதர்சன், தரம் 09.




த. ஜனோசன், தரம் 09.



இ. ஸ்ரீசிந்துஜன், தரம் 08.




இ. சஜீபன், தரம் 09.



த. ஜின்சிகா, தரம் 08.



லோ. வாகினி, தரம் 10.



த.ஜின்சிகா, தரம் 08.

## மூன்று எழுத்தில் உள்ள மூச்சு

★ இயற்கை அன்னை பெற்றெடுத்த இந்த உலகில் "உயிர்" என்ற மூன்றெழுத்தோடு "உடல்" என்ற மூன்றெழுத்தில் உருவாகும் ஒரு குழந்தை அப்பா அம்மா என்ற மழலை பேசுவது மூன்றெழுத்துத்தான்

★ ஐந்து வயதானதும் "கல்வி" என்ற மூன்றெழுத்தை கற்று அறிவு என்ற மூன்றெழுத்தில் தேர்ச்சியடைகிறான்

★ வாலிபப் பருவம் வந்ததும் "இளமை" என்ற மூன்றெழுத்தில் தான் "திறமை" என்ற மூன்றெழுத்தைக் காட்டி "தொழில்" என்ற மூன்றெழுத்தைத் தேடி பணம் என்ற மூன்றெழுத்தை நாடி "சுகம்" என்ற மூன்றெழுத்தை அடைகிறான்

★ காளைப் பருவம் வந்ததும் "காதல்" என்ற மூன்றெழுத்துக்கு உயிர் கொடுக்க "மனைவி" என்ற மூன்றெழுத்தை வாழ்க்கைத் துணைவியாக அடைந்து "சுகம்" என்ற மூன்றெழுத்தை அனுபவிக்கின்றான்

★ பின்னர் "பிள்ளை" என்ற மூன்றெழுத்துக்கு "அப்பா" என்ற மூன்றெழுத்தால் அதிபதியாகின்றான் "கவலை" என்ற மூன்றெழுத்தையும் கற்கின்றான்

★ காலம் வந்ததும் "வயது" என்ற மூன்றெழுத்து அதிகரித்து "புதுமை" என்ற மூன்றெழுத்து முத்தியடைந்து முடிவில் "உயிர்" என்ற மூன்றெழுத்து "உடல்" என்ற மூன்றெழுத்தை விட்டுப் பரிந்து "பிணம்" என்ற மூன்றெழுத்து "சுடலை" என்ற மூன்றெழுத்தில் "உரம்" ஆகிறது

ம. பாமினி
தரம் : 10

## வசந்த கால ராகங்கள்

இது பள்ளிப்பருவ வாழ்வு
கவலைகளே யறியாத கல கலப்பான வயது
காலத்தின் பாதைதனில்

பாடங்களேயிங்கு நாதங்கள்
சிலருக்கு ஆலாபனைகள்
பலருக்கு முகாரிகள்

துணிவுகள் கிளர்ந்தெழும் வீரமிகு பருவமிது
அது வாழ்வில் அடித்தளத்தை
இடுகின்ற அலாதியான பருவமிது

எதனையும் சாதித்திடும்
எத்தனை தோல்விகளையும்
சகிக்காமல் கிளறிவிடும் ஆழ்மனம்

படிப்பென்றால் பிடிக்காத வயசு
பரீட்சையில் தோல்வி கண்டால்
ஏங்கியழும் மனசு

ஆனாலும் போராடி மீட்போம்
எங்களின்
வசந்தகால இராகங்களை

பா. கேதினி
க.பொ.த.(உ/த) 2010.

## மனம்

மனதில் உள்ளவை
என்றும் அழியாது
காவியமாய் உள்ளமதில்
பெண்ணே வீறுகொண்டு வாழஎழு!
இன்பதுன்பம் தாண்டி
நீ இன்று புதுமைப் பெண்ணாக மாறி
கல்வி என்னும் வசந்தத்தை
முகம் கொள்

## அம்மா

அன்பு எனும் மேடையிலே அமைந்த
ஒரு பாசவிழி
அதை முத்தமிட வந்த ஒரு அன்பு
நீ அல்லவா
கோயில் எனும் வாசலிலே
நாமும் அதை வழிபடவே
நான் பட்ட துயர் எதுவோ அதை
தாங்கிடவே நீ வருவாய்
எந்த கஷ்ரம் துன்பம் வந்த போதிலும்
அதைத் தாங்கும் சக்தி நீ அம்மா
உன்னை பெற்றெடுத்த அன்னை இல்லை
எனினும் எம்மை பத்து மாதம்
கருவறையில் சுமந்து பெற்ற தாயே
மறு பிறப்பு என்று ஒன்று
இருந்தால் மறுபடியும் உன்
கருவறையில் பிறந்திடுவேன்
உயிரிலும் உயிராய்
என்னை ஈன்றெடுத்த அன்னையே
உன்னை எப்படி மறப்பது அம்மா

## வெற்றிக்கு வழி

அன்பு காட்டு ஆனால் அடிமையாகி விடாதே
இரக்கம் காட்டு ஆனால் ஏமாந்து போகாதே
பணிவாய் இரு ஆனால் கோழையாய் இராதே
கண்டிப்பாய் இரு ஆனால் கோபப்படாதே
சிக்கனமாய் இரு ஆனால் கஞ்சனாய் இராதே
வீரனாய் இரு ஆனால் துஷ்டனாய் இராதே
சுறுசுறுப்பாய் இரு ஆனால் பதட்டப்படாதே
தர்மம் செய் ஆனால் ஆண்டியாகி விடாதே
பொருளைத் தேடு ஆனால் பேராசைப்படாதே
உழைப்பை நம்பு ஆனால் கடவுளை மறந்து விடாதே.

ப. தமிழினி
தரம் : 10

## பெரியவர்க்கு வணக்கம்

உற்றவரே எம்மை ஏற்றவரே தினம்
உமக்கே நமஸ்காரம்
முற்றும் நீர் செய்த உதவிக்கு நான் என்ன
மொழிவேன் உபசாரம் !

பலவருடம் எம்மை பாரிலே சுமந்து
பலதுயர் சகித்தீரே
எத்தனை இன்னல்கள் உடனும்
எம்மை ஏங்காமல் காத்தீரே

தேனினும் அமுதினும் இனிதே எமக்கு நீர்
செப்பிய நல்வார்த்தை
வானின் அமரர்க்கும் வருமோ இதுபோல்
மங்களத் திருப்பாட்டு

கவலை எல்லாம் எம் கவலை அல்லால் வேறு
கவலையொன்றறிவீரே
புவியிலே எம்சுகம் அல்லது வேறொரு
பொருளையும் குறியீரே

பல வியாதிகள் எம்மை அணுகாமல்
பத்தியம் பிடித்தீரே
காலமெல்லாம் எமக்கே வாழ்ந்து
பல பணிகள் செய்தீரே

இரவு முழுதுமே எம் நினைவில்
தூங்காதிருந்தீரே
கவலையீனத்தால் எமக்கு வரும்
கவலையைத் தீர்த்தீரே

தரணியில் எம்சுகம் வேண்டியே நீர் பல
தருமங்கள் செய்தீரே
கருணை செய்யும்படி கடவுளைத் துதித்து
காணிக்கை செய்தீரே

சி.தவலதன்
க.பொ.த.(உ/த) 2010.

## பாசம்

அன்பு அது பாசத்தின் எல்லை
அன்பின் தூய்மை நிகரில்லாச் செல்வம்
அன்பு பல வகை அதில்
தாயன்பு சேய்க்குக் கிடைக்கும்
தெய்வீகச் சொத்து

சகோதரப் பாசம் அதை சொல்லிலோ வடிக்க முடியுமா?
அநுபவித்தால் தான் புரியும்
உரிய நேரத்தில் அதன் அருமை தெரியும்
பாசத்தின் பிணைப்பில் தைரியமே பலவாகும்

நண்பர்களின் பாசமது வாழ்க்கையிலே
கிடைத்து விட்டால் - நல்ல
வசந்தம் எல்லாம் தேடி வரும்
வாட்டங்கள் மாறிவிடும்

அன்பென்னும் பாசமது தேடிவருவது
அப்பாசத்தை புரிந்து அளவாக
அன்பு வைத்தால் அதுபோல் சுகம் எதுவுமில்லை

பிரசாந்தினி சற்குணராசா
தரம் : 09

## தூரிகை பேசட்டும்

ஓவிய நண்பனே
உன் தூரிகையை
நம்பக்கமும் திருப்பிவிடு
உன் தூரிகையால்
நம் துன்பங்களையும்
கீறிவிடு......

வளைந்து நெழிந்து
வரையும் தூரிகையால்
வறுமையையும் கோடாக்கிவிடு
கலவை செய்யும் நிறங்களால்
கலங்கி நிற்கும் மனங்களை
காட்சிப்படுத்து

மெலிந்த தேகத்தை
வறண்ட தேசத்தில்
பீறிட்டு ஓடும் உதிரத்தை
விலங்குகளின் காய்ந்த கரங்களை
மலர்களின் காய்ந்த கரங்களை
மழலைகளின் காய்ந்த கரங்ளை
அறுந்து விழுந்த தாலிகளை
அங்கம் இழந்த ஆறறுவிகளையும்
சேர்த்து வரைந்து விடு

முடிந்தால்........
முட்களின் மென்மையையும்
கருமையின் புனிதத்தையும்
யுத்தத்தின் சுகத்தையும்
மரத்தின் மகிழ்ச்சியையும்
சிங்கத்தின் இரக்கத்தையும்
அன்னத்தின் கோபத்தையும்
சேர்த்துக் கொள்



மொத்தத்தில்
நம்முடைய வாழ்வை
வரைந்து கொள்
அப்போது நீ ஓர்
உலகப் புகழ் பெற்ற
ஓவியன்

கு. சிவதர்சன்
தரம் 09.

## மணற் கரையில் நண்டுகள்

வெள்ளிய அன்னக் கூட்டம்
வெள்ளிய அன்னக் கூட்டம்
விளையாடி வீழ்வதைப் போல்
துள்ளியே அலைகள் மென் மேல்
கரையினிற் சுழன்று வீழும் !
கரையினிற் சுழன்று வீழும் !

வெள்ளலை, கரையைத் தொட்டு
மீண்ட பின் சிறுகால் நண்டுப்
விளையாடி ஓடி
விளையாடி ஓடி
பெரியதோர் வியப்பைச் செய்யும்
பெரியதோர் வியப்பைச் செய்யும்

த. கிருஷாலினி
தரம் 06.

## சுவாமி விபுலானந்தர்

* ஈழத்தில் சமயத்தை வளர்த்த பெரியார்களில் சுவாமி விபுலானந்தரும் ஒருவர் ஆவார். இவர் மட்டக்களப்பில் உள்ள காரைதீவு என்னும் இடத்தில் சாமித்தம்பி க்கும் கண்ணம்மைக்கும் மகனாக அவதரித்தார். இவரது பிள்ளைத் திருநாமம் மயில்வாகனர் ஆகும். இவர் தனது ஆரம்பக் கல்வியை குஞ்சுத்தம்பி ஆசிரியரிடமும் வசந்தராசப்பிள்ளை அவர்களிடமும் கற்றுக் கொண்டார்.


* இவர் 1882ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் திகதி பிறந்தார். மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதர் பரீட்சையில் சித்தியெய்தினார். இப்பாடத்தில் சித்தியெய்திய முதலாவது இலங்கையர் என்ற பெருமையும் இவருக்குரியதாகும். 1922ஆம் ஆண்டு மயில்வாகனர் துறவியாகி தூய்மை வாழ்வு பெற சென்னை ஸ்ரீராம கிருஷ்ண மடத்தில் சேர்ந்தார்.

* 1924ஆம் ஆண்டு சித்திரை மாதம் சுவாமி சிவானந்தா அவர்களால் மயில்வாகன ருக்கு விபுலானந்தர் என்ற சிறப்புப் பெயர் சூட்டப்பட்டது. இவர் பிறந்த காலப் பகுதியில் ஆங்கிலேயர் ஆட்சி நிலவியது. இவருக்கு தமிழையும் சைவத்தையும் வளர்க்கும் தேவை ஏற்பட்டது. இதனால் மட்டக்களப்பில் சிவானந்தா வித்தியாலயமும் திருகோணமலையில் இந்துக் கல்லூரியும் அமைக்கப்பெற்றன. இப்பாடசாலையில் சமயக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

* இவர் பல நூல்கள் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல் ஒன்று குமரவேல் என்பதாகும். ஜசவத்தையும் தமிழையும் வளர்த்த விபுலானந்தர் யாழ் நூல் அரங்கேற்றம் நிறைவுற்ற நாளாகிய 19.07.1947இல் சனிக்கிழமை இரவு இறைபதம் அடைந்தார். இவரது பூதவுடல் சிவானந்தா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது.

ந. கௌசிகன்
தரம் 07.

## காந்தித் தாத்தா



காந்தித் தாத்தா நல்லவர்
கடவுள் போல் உயர்ந்தவர்
மாந்தர் குலம் வாழவே
வழிமுறைகள் சொன்னவர்

அன்னை சொல்லை மதித்தவர்
அகிம்சை நெறியைக் காத்தவர்
தன்நலத்தைத் துறந்தவர்
தயவு கருணை மிகுந்தவர்

வன்முறையை வெறுத்தவர்
வணக்கத்திற்கு உரியவர்
முன் பிறந்த புத்தரைப்
போன்ற முனி ஆனவர்

உண்மைதனை உணர்ந்தவர்
உழைத்து உழைத்து உயர்ந்தவர்
பண்பு நலம் மிக்கவர்
பாப்பா போலச் சிரித்தவர்

நம்மவர்க்காய் உழைத்தவர்
உயிரைக் கூடக் கொடுத்தவர்
பற்று இல்லாமல் வாழ்ந்தவர்
பாரதத்தைக் காத்தவர்

தென்பு மிக்க மனத்தவர்
தீர வாழ்வு வாழ்ந்தவர்
அன்பு மிகவே பொழிந்தவர்
அகிலம் போற்றும் அண்ணலாம்

து. ஜெகதரன்
தரம் 09.

## எனது செல்லப் பிராணி மைனா

எனது செல்லப் பிராணி மைனாவாகும் அதனை நாம் வீட்டில் செல்லமாக கண்ணா என்று அழைப்போம். அதனை அப்படி அழைத்தவுடன் காலுக்குக் கீழ் வந்து நிற்கும். அதற்குச் சாப்பாடு கொடுப்பதென்றால் கூட்டின் அருகே வந்து கண்ணா என்று கூப்பிட்டால் விளங்கிவிடும். சாப்பாடு கூடினால் வேண்டாது. பேசாமல் இருக்கும். அப்போது விளங்கிவிடும் அதற்கு சாப்பாடு கூடிவிட்டது என்று. எமது செல்லப் பிராணியை வறுமையிலும் செம்மையாகவே வளர்த்தோம். விசேட தினத்தின் போது கூட்டமாகக் கதைக்கும் போது மகிழ்ச்சியில் ஓர் ஆட்டமாடும். எமது வீட்டிலே அம்மா சரி அப்பா சரி மைனா உணவு உண்ணாவிட்டால் அவர்கள் விரதம் அப்படி எமது கண்ணாவை நாம் மிக அன்புடன் வளர்த்து வந்தோம். எமது மைனாவை ஒரு முறை கண்காட்சிக்குக் கூட்டிச் சென்றபோது முதலை வாயினூடாக உள்ளறைக்குச் செல்லுதல் அங்கே நீர்வீழ்ச்சிகள் அருவிகள் போன்றன காணப்பட்டன. எனது செல்லப்பிராணி அன்று தான் அந்தக் காட்சியை முதன் முதலாகக் கண்டது. அங்கே பழங்கள், காய்கறிகள், இசைக்கருவிகள் அங்கே காணப்பட்டன. அருகில் ஆடைகள், தும்புத்தடி, விளக்குமாறு போன்றன காணப்பட்டன. மைனா நீர்வீழ்ச்சிக்கு இன்னொரு முறை கூட்டிச் செல்லக் கேட்டது. நான் அதனை அம்மாவிடம் கூறிய போது மறுக்காது கூட்டிச் சென்றார். கண்ணா அதனால் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தது. எமது கண்ணாவின் பிறந்தநாளை கொண்டாடினோம். அது போன வருடம் உயிரிழந்தது. அந்த மைனாவை மறக்க முடியாமல் நானும் எனது குடும்பத்தாரும் உள்ளோம்.

ராஜன் அறிவழகி
தரம் 07.

## அறிவோம்

1. மிகமிக நல்ல நாள் - இன்று
2. மிகப் பெரிய வெகுமதி - மன்னிப்பு
3. மிகவும் வேண்டாதது - வெறுப்பு
4. மிகப் பெரிய தேவை - சமயோசித புத்தி
5. மிகக் கொடிய நோய் - பேராசை
6. மிகவும் சுலபமானது - குற்றம் காணல்
7. கீழ்த்தனமான விடயம் - பொறாமை
8. நம்பக் கூடாதது - வதந்தி
9. ஆபத்தை விளைவிப்பது - அதிக பேச்சு
10. செய்யக் கூடாதது - உபதேசம்
11. செய்ய வேண்டியது - உதவி
12. விலக்க வேண்டியது - விவாதம்
13. உயர்வுக்கு வழி - உழைப்பு
14. நழுவ விடக் கூடாதது - வாய்ப்பு
15. இளமையில் தேவை - கல்வி
16. முகத்தில் கண் உள்ளவர் - கற்றோர்
17. ஒருவர் மீது வைப்பது - அன்பு
18. மறக்க கூடாதது - நன்றி
19. மறக்க வேண்டியது - ஒருவர் செய்த தீமை
20. ஒருவர் கூறுவதை இன்னொருவரிடம் கூறாது இருப்பது - நம்பிக்கை
21. கோபம் வரும் போது காக்க வேண்டியது - பொறுமை
22. முகத்தில் புண் உள்ளவர் - கல்லாதவர்
23. பெற்றோரிடத்தில் - அன்பு
24. இரு நண்பர்களிடையே - நட்பு
25. மகிழ்ச்சியின் போது - சிரிப்பு
26. உழைக்கும் போது - களைப்பு
27. தவறின் போது - தப்பு
28. வாதாடும் போது - எதிர்ப்பு
29. மனதில் துயரிடும் போது - வெறுப்பு
30. தவறை உணரும் போது - மன்னிப்பு

ரா. ரஜீந்தினி
தரம் 09

## உதைப்பந்தாட்டம்

1. உலகிலே சிறந்த கோல் காப்பாளர் யார்?
ஒளிபெருக்கான்
2. 2006ஆம் ஆண்டு சம்பியனான நாடு எது?
போர்த்துக்கல்
3. மாட்ராளியுடன் சண்டை பிடித்த நட்சத்திர வீரர் யார்?
சிடோன்

க.அனுசன்
தரம் 09.

## கிரிக்கெற்

1. இருபது ஓவர் கொண்ட போட்டியில் ஒரு ஓவரில் அதிகூடிய ஓட்டத்தை பெற்றவர் யார்?
யுவராஜ் சிங்
2. ஐ.சி.சி தர வரிசையில் (ரெஸ்ட்) பந்து வீச்சில் முதலிடத்தில் நிற்பவர் யார்?
முத்தையா முரளிதரன்
3. ஐ.சி.சி தர வரிசையில் (ரெஸ்ட்) துடுப்பாட்டத்தில் முதலிடத்தில் நிற்பவர் யார்?
குமார சங்ககார
4. இலங்கை கிரிக்கெட்டில் மூவேந்தர்களாக வர்ணிக்கப் படுபவர்கள் யாவர்?
குமார் சங்ககார
திலரட்ணம் டில்சான்
மகல ஜெயவர்த்தன
5. தொடர்ந்து 3 வருடம் உலகக் கிண்ணத்தை கைப்பற்றி சாதனை படைத்த அணி எது?
அவுஸ்திரேலியா
6. அண்மையில் (2008) நடைபெற்ற ஆசியக் கிண்ணத் தொடரில் தனது பிறந்த நாளிலே அதி குறைந்த பந்துகளில் அதிவேக சதம் அடித்தவர் யார்? ஏந்த அணி?
சனத் ஜெயசூரியா
இலங்கை
7. முரளிதரனோடு பந்து வீச்சுச் சாதனையில் போட்டி போட்டவர் யார்?
சேன்வோன்

க. அனுஜன்.
தரம் 09.

## தெரிதல்

1. உலகில் மிகப் பெரிய நூலகம் எது ?
ரஷ்யாவில் உள்ள லெனின் தேசிய நூலகம்
2. இலங்கையில் தேயிலை பயிரிடப்பட்ட ஆண்டு ?
1830
3. இலங்கையில் இறப்பர் பயிரிடப்பட்ட ஆண்டு ?
1801
4. தமிழ் என்னும் சொல்லிற்குரிய பொருள் ?
இனிமை
5. சீவக சிந்தாமணி என்னும் நூலை எழுதியவர் ?
திருத்தக்க தெவர்
6. இடியோசை கேட்டு பாம்பு நடுங்குவது ஏன் ?
பாம்பின் காதான சவ்வு உடைந்தால் அது இறந்து விடும்
7. மின்னி மின்னிப் பூச்சியின் வாலில் ஒளி தெரிவது ஏன் ?
பொஸ்பரஸ் இருப்பதால்
8. மாட்டின் வயதைக் கணிப்பது எங்ஙனம் ?
பற்களைக் கொண்டு
9. உணவு உட்கொள்ளும் முன் நீர் அருந்தும் மிருகம் எது ?
குதிரை
10. முட்டையில் நின்றபடி அடைகாக்கும் பறவை எது ?
பென்குயில்

சி. கஜந்தினி
தரம் : 8

## உங்களுக்குத் தெரியுமா?

1. பொயோன்சாய் என்றால் என்ன?
மண் தொட்டிகளில் வளரும் மரம்
இக்கலை அஸ்ஸாமில் தொடங்கியது

2. சகயுகத்தை வழங்கியவர் யார்?
கனிஷ்க் சக்கரவர்த்தி

3. ஒரு கண்டமே ஒரு நாடாகவுள்ளது. அது எது?
ஆஸ்திரேலியா

4. காந்திஜீ நிறுவிய முதலாவது ஆச்சிரமம் எது?
தென்னாபிரிக்காவில், "போனிக்ஸ் பண்ணை" என டாபன் சமீபத்தில் 1904 இல் நிறுவப்பட்ட ஆசிரமம்

5. மிகப் பழமையான தேசிய கீதம் கொண்ட நாடு எது?
ஜப்பான். "கிமியாக்கா" கி.பி எண்பதாவது நூற்றாண்டில் இயற்றப்பட்டது.

6. எதன்ஸ் நகரில் 1894 இல் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் எவ்வளவ நாடு கலந்து கொண்டது?
ஒன்பது

7. இந்திய தேசிய காங்கிரஸ் தனது நூற்றாண்டு விழாவை எப்போது கொண்டாடியது?
1985 இல்

8. தபால் தலையை முதன்முதலில் வெளியிட்ட நாடு எது?
இங்கிலாந்து

9. புதுடில்லியில் வைஸ்ராய் மாளிகையை நிர்மாணித் தவர் யார்?
சந் எட்வின் லுட்டின்

10. நவீன இத்தாலியின் தந்தை எனப்படுபவர் யார்?
கரிபால்டி

11. வட இந்தியாவில் கோமதி நதிக்கரையில் அமைந்துள்ள நதிக்கரை எது?
லக்னோ

12. மனித உடலின் நீளமான அவயம் எது?
சிறுகுடல்

13. புத்தர் நிர்வாண முத்தி அடைந்த தலம் எது?
குசிநகரம்

14. சினிமா கொட்டகையே இல்லாத நாடு எது?
சவுதி அரேபியா

15. காஞ்சிபுர நெசவாளிகளுக்குள்ள ஒரு தனிப் பெயர் யாது?
பட்டு நூல் நெசவாளர்

கஜந்தினி
தரம் : 08

## ஒரு மனிதனுக்கு ஒரு நாட்டில் உள்ள குடியியல் உரிமைகள்

- ★ வாழும் உரிமை
- ★ சுதந்திரமாகச் சிந்திக்கும் உரிமையும் தனிப்பட்ட பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளும் உரிமையும்
- ★ இம்சைக்கும் அநாவசியமான தண்டனைக்கும் ஆளாகாதிருக்கும் உரிமை
- ★ கல்வி பெறும் உரிமை
- ★ விரும்பிய தொழிலைச் செய்யும் உரிமை
- ★ சொத்துக்களைச் சேர்க்கும் உரிமை

## ஒரு மனிதனுக்கு ஒரு நாட்டில் உள்ள அரசியல் உரிமைகள்

- ★ வாக்களிக்கும் உரிமை
- ★ அரசியல் கட்சிகளை ஒருங்கமைக்கும் உரிமை
- ★ தேர்தலில் அபேட்சகராக நிற்கும் உரிமை
- ★ அரசாங்கத்தில் அல்லது அரசியல் கட்சிகளில் பதவிகளை வகிக்கும் உரிமை
- ★ அரசாங்கத்தை விமர்சிக்கும் உரிமை

எஸ். குணாளினி

## சிந்திக்க ....

- ★ சந்தேகத்தை அதிகமாக வளர்க்காதீர்கள். சந்தேகமே உங்கள் இயல்பை மறக்கச் செய்யும்
- ★ பிறர் உங்களை வெறுத்தாலும் நீங்கள் யாரையும் வெறுக்கலாகாது
- ★ பணம் பேசத்தொடங்கும் போது உண்மை ஊமையாகிவிடும்
- ★ அமைதியாக எடுக்கும் முடிவு ஆனந்தமானது அவசர முடிவுகள் ஏமாற்றமளிக்கும்
- ★ கொடுக்கம் போது தயங்காதீர்கள். இழக்கும் போது வருந்தாதீர்கள். சம்பாதிக்கும் போது பேராசைப் படாதீர்கள்
- ★ உண்மை கற்பனையை விட எப்போதும் அதிசயமாக இருக்கும்.
- ★ சிரியுங்கள் உலகம் உங்களுடன் சிரிக்கும் அழுங்கள் நீங்கள் ஒருவர் மட்டுமே அழுவீர்கள்
- ★ மனதைப் பின்பற்றாதே மனச்சாட்சியைப் பின்பற்று
- ★ ஒரு மனிதன் தெரிந்து கொள்ள வேண்டியது வதனம் அல்ல இதயம்
- ★ சோதனை இல்லாமல் வாழ்க்கை பூரணமடைவ தில்லை
- ★ வாழ்க்கை என்றால் சவால்கள் சூழ்ந்து காணப்படும்
- ★ துன்பத்திலும் இன்பத்திலும் தோள் கொடுக்கும் உறவு நட்பு
- ★ வாழ்க்கை வண்டியின் அச்சாணி நம்பிக்கை

இ. அம்பிகா

## வாழ்க்கைக்குச் சில சிந்தனைகள்

- கட்டளை இடக்கூடிய பதவி வேண்டுமெனில் முதலில் கீழ்ப்படியக் கற்றுக் கொள்ளுங்கள்
- அழுத கண்ணீரை உடையவனுக்குத்தான் கண்ணீரின் மகிமை புரியும்
- மன்னிக்கும் மனப்பாங்கு இருக்கும் இடத்தில் தான் இறைவன் இருக்கிறார்
- இல்லை என்று ஒரு போதும் சொல்லாதே என்னால் இயலாது என்று ஒரு போதும் எண்ணாதே
- சுதந்திரமானவனாக இரு எவரிடத்தும் எதையும் எதிர்பாராதே
- பிறர் உன்னை இகழினும் தூற்றினும் உன் அமைதியைக் கலையவிடாதே
- சிரியுங்கள் உலகம் உங்களுடன் சேர்ந்து சிரிக்கும். அழுங்கள் நிங்கள் ஒருவர் தான் அழுது கொண்டிருப்பீர்கள்
- அகந்தை அறிவைக் கெடுக்கும் புகழிலும் வேண்டும் அடக்கம்
- பணி எதனையும் அதனைப் பதறாது இம்மியழவும் மனம் சிதறாது நிதானமாகத் திறம்பட ஆற்றப் பழகுங்கள்
- உண்மை கற்பனையை விட எப்போதும் அதிசயமாகத் தான் இருக்கும்
- வார்த்தையில் மட்டும் பணிவு இருந்தால் போதாது நடத்தையிலும் இருக்க வேண்டும்

இ. கனிதா
A/L 2010

## சிந்தனைத் துளிகள்


- நிகழ்காலக் கடமைகளை சரியாகச் செய்பவர்கள் மட்டுமே வருங்காலத்தில் இலட்சியத்தை அடைகின்றார்கள்
- நெருக்கடிகளையோ, தடைகளையோ கண்டு இலட்சியத்தை மாற்றிக் கொள்பவன் எதையும் அடைவதில்லை
- படிக்காதவன் ரயிலில் திருடுவான் படித்தவன் ரயிலையே திருடுவான்
- கொள்கையில்லாக் கல்வி வேரில்லாமல் ஊன்றிய செடியைப் போன்றது
- அறியாமை உள்ள மனிதர் தனக்கு புரியாதது எல்லாம் பாராட்டிக் கொண்டிருப்பான்
- கல்லின் மீது உளி விழும் போது கல் கலங்கினால் சிலை உருவாகுமா? செதுக்கப்படுவதனை சிதைக்கப் படுகின்றோம் எனக் கருதலாமா?
- எனது அறியாமையைத் தவிர வேறு ஒன்றுமே அறிந்திருக் கவில்லை
- கடவுளின் மகத்தான கண்டுபிடிப்பு மனிதன் மனிதனின் மகத்தான கண்டுபிடிப்பு கடவுள்
- சுதந்திரத்தை நசுக்குபவர்கள் அதை எப்போதும் சட்டம் ஒழுங்கு என்ற பெயரிலே செய்கின்றார்கள்

க. தர்சினி
தரம் : 11

## விடுகதைகளும் விடைகளும்

1. உரிக்க உரிக்கத் தோல் அது என்ன ?
   வெங்காயம்
2. கூவி அழைப்பான் கூடி உண்ணுவான் அவன் யார் ?
   காகம்
3. நான்கு கால் உண்டு ஆனால் நடக்கத் தெரியாது அவன் யார் ?
   கதிரை
4. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல் அது என்ன ?
   கிளி
5. மழையில் விரிவான் வெய்யிலில் சுருங்குவான் அவன் யார் ?
   குடை
6. தலையைச் சீவினால் தாகம் தீர்ப்பான் அவன் யார் ?
   இளநீர்
7. தொப்பென்று விழுவான் தொப்பி கழற்றுவான் அவன் யார் ?
   பனம்பழம்
8. ஈமானுக்கு எத்தனை கால் ?
   10
9. செம்பு நிறைய முத்து அது என்ன ?
   மாதுளம்பழம்
10. ஓடும் இருக்கும் அதன் உள்வாய் வெளுத்திருக்கும் அது என்ன ?
    தேங்காய்
11. முட்டை இடும். சட்டை கழட்டும். மூன்று மாதம் அடைபடுக்கும். நாக்கு நீட்டும். படமெடுக்கும். நாயன் ஆணை பாம்பும் இல்லை. அது என்ன ?
    பனங்கிழங்கு
12. எங்கள் வீட்டுத் தோட்டத்திலே மஞ்சல் குருவி ஊஞ்சலாடுகிறது அது என்ன ?
    மாம்பழம்
13. உயர எறிந்தால் தரையில் விழுவான். தரையில் எறிந்தால் உயர எழுவான் அவன் யார் ?
    பந்து
14. உள்ளே இருந்தால் ஓடித் திரிவான். வெளியே வந்தால் விரைவில் மடிவான். அவன் யார் ?
    மீன்
15. பல்லிருக்கும் கடிக்காது அது என்ன ?
    சீப்பு

த. கிருஷாலினி
தரம் 06.



## மருத்துவக் கண்டு பிடிப்புக்கள்

- மருத்துவத்தின் தந்தை - ஹிப்போ கிறடிஸ்
- குருதியின் வகைகளைக் கண்டு அறிந்தவர் - லான் ஸ்ரெயினர்
- குருதி ஏற்றும் முறையைக் கண்டு பிடித்தவர் - றிச்சார்ட் லோவர்
- இதயத் துடிப்பு மாணியைக் கண்டு படித்தவர் - லேனக்
- ஆயுள் வேத மருத்துவ முறையின் தந்தை சாரகா
- விற்றமின் எனும் பெயரை அறிமுகம் செய்தவர் - பங் விற்றமின்
- கூர்ப்புக் கொள்கையை நிறுவியவர் - சார்ஸ் டார்வின்
- மனிதனின் குருதி உறை நிலை 0.55°C
- மூளைக்கு குருதி செல்லாவிடின் இறப்பு ஏற்படுவதற்குரிய கால அளவு 1.5 நிமிடம்
- இதய அறுவடை சிகிச்சையின் போது இதயம் இயங்காமல் இருக்கச் செலுத்தப்படுவது பொட்டாசியம் கலந்த நீர்
- பெண்களுக்கு மாரடைப்பு நோய் வராமல் இருப்பதற்கான சுரப்பி - ஈஸ்ரஜன் (Eastogen)
- புகைத்தலால் மனிதனுக்கு ஏற்படும் ஆபத்தைக் கண்டு பிடித்தவர் - ரேய்மன்ட்ரீட்
- மூளைக் காய்ச்சல் நோயின் (Meningitis) பிரதான காரணியான பற்றீரியா மெனிக்சோ கொக்கஸ் (Meningococus)
- மனித உடலில் முதலில் இறக்கும் பகுதி - மூளையின் கலங்கள்
- சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை குருதியில் அசாதாரணமாகப் பெருகுவதால் ஏற்படும் நோய் - பொலிசைத்தீமியா (Polycythemia)
- வெண்குழியங்களின் எண்ணிக்கை குருதியில் அசாதாரணமாகப் பெருகுவதால் ஏற்படும் நோய் - இலுக்கேமியா (Blood Cancer)
- மனித உடலில் இரும்புச் சத்து அகத்துறிஞ்சப் படுவதற்கு அவசியமான விற்றமின் - C

## மனித உடலிலே.....

- என்புகளின் எண்ணிக்கை 206
- மிகப்பெரிய அங்கம் - தோல்
- தசைகளின் எண்ணிக்கை 609
- மிகப் பெரிய சுரப்பி - ஈரல்
- மிகப் பெரிய, மிகநீளமான, மிகப் பலமான என்பு - தொடை என்பு
- மிகச் சிறிய என்பு - செவிச் சிற்றென்பு
- கருத்தரித்த பின் முளையத்தில் முதல் தோன்றும் அங்கம் - இதயம்
- இறந்த பின் வளர்பவை - மயிர், நகம்

கு. தர்சினி
தரம் 11.

## சு. இராசரத்தினம் ஐயா

அடிமேல் அடியெடுத்து
அவனியிலே நீர் நடந்தீர்
தடிதான் துணையெனவே
தரணி மீது பவனி வந்தீர்

பசிமேல் பசியெடுக்க
இடிமேல் இடிஇடிக்க
வெய்யிலும் மழையும் பாராது
இந்த இல்லத்தைக் கட்டினீர்

எத்தனை எத்தனை வாழ்க்கைக் களங்கள்
அத்தனையும் அயராது பெயர் எடுத்தீர்
தினம் தினம் இன விடிவிற்காய் உழைத்தீர்
வித்தாக புகழ் உம்மை வந்தடைந்தது

உயிர்க்கூடு பாராது
உடல் அசதி பாராது
நட்டநிசி வேளையிலும் நீர் போட்ட வேலி
வேளையெல்லாம் உம் பெயர் சுமந்து நிற்குது


ஒற்றுமைக்காய் வித்தானாய்
நீதியின் முத்தானாய்
ஏழைகளின் சத்தானாய்
அள்ளிக் கொடுப்பதில் கொத்தானாய்
இல்லத்தவர் நெஞ்சில் சொத்தானாய்

பிஞ்சுகள் எம் வாழ்வுக்காய்
நெஞ்சத்தில் கூட
கூடுகள் கட்டியவர்
தேடி இடம் எடுத்து
இல்லங்கள் அமைத்தவர்
நீதித்துறையை நீர்
விட்டெறிந்து போனாலும்
ஆண்டவனின் நியாய அலைகளிலே
நீங்கள் தான் நீதிபதி

அரக்க குணத்தவர் மத்தியிலே
இரக்க குணத்திற்கு இருப்பிடமாய்
விரும்பும் மனம் கொண்டாய்
எல்லோரையும் விரும்பும்
மனது உமதய்யா

ஆண்டாண்டு காலம்
அழுது புரண்டாலும்
மாண்டார் வருவதில்லை
செந்தமிழ்ச் செல்வியின் செம்மொழி
நீங்கள் மாண்டவரல்லவோ
எம் மனத்தை ஆண்டவர் அல்லரோ

வி.இலங்கேஸ்வரன்
தரம் 11



சைவ வித்தியா விருத்திச் சங்கச் சிறுவர்கள்